மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அசல் வழக்கு எண்.59/2017 நாள்– 25.11.2022

வாதியின் / பிரதிவாதியின் ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி P.சீதாலட்சுமி, Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்– முருகன் (வா.சா.1) தந்தையின் பெயர்–

விலாசம்– தாலுகா–

வயது– தொழில்

ஜாதி– சமயம்–

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) 22.6.1955 – பெரிய அய்யப்ப நாயக்கர், நடுவுல அய்யப்பநாயக்கருக்கு எழுதிக்கொடுத்த விடுதலைப்பத்திரம் – அசல. – வா.சா.ஆ.1.

2) 8.5.1956 போலம்மாள் என்ற அய்யம்மாள் அவரது தகப்பனார் சின்னஅய்யப்ப நாயக்கர் பாகத்தை நடுவுல அய்யப்பநாயக்கருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் – அசல் – வா.சா.ஆ.2.

3) 25.3.1981 – 1 வது வாதி மங்கத்தாயம்மாள் சர்வே எண்.14/3 ல் உள்ள சொத்தை கிரையம் கொடுத்த கிரையப்பத்திரம் – அசல் – வா.சா.ஆ.3.

4) 26.3.1981 – 2 வது வாதிக்கு அய்யம்மாள் சர்வே எண்.14/1 ல் உள்ள சொத்தை கிரையம் கொடுத்த கிரையப்பத்திரம் – அசல் – வா.சா.ஆ.4.

5) – 2 வது வாதி மங்கத்தாயம்மாள் சர்வே எண்.14/1 ல் உள்ள 2 ஏக்கர் 36 செண்டு நிலத்திற்கு உள்ள பட்டாவை காட்டக்கூடிய கணினி பட்டா – கணினி நகல் – வா.சா.ஆ.5.

6) – 2 வது வாதி பெயரில் சர்வே எண்.14/3 ல் உள்ள 3 ஏக்கர் 4 செண்டு நிலத்திற்கு உள்ள பட்டா கணினி பட்டா – கணினி நகல் – வா.சா.ஆ.6.

7) – வெம்பக்கோட்டை தாலுகா சேர்வைக்காரன்பட்டி கிராமம் சர்வே எண்.14 ன் வழியாகவும் சங்கரபாண்டியாபுரம் எல்கைக்கூடம் வரை செல்லும் (−−)கோடு வண்டிப்பாதையை காட்டக்கூடிய கிராம புலப்படம் – ஜெராக்ஸ் நகல் – வா.சா.ஆ.7

8) 27.12.2016 – 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு 1,2 வாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு – அலுவலக நகல் ரசீது – வா.சா.ஆ.8

9) 28.12.2016 – 2 வது பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை – அசல் – வா.சா.ஆ.9.

10) 28.12.2016 – 3 வது பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை – அசல் – வா.சா.ஆ.10.

11)28.12.2016 – 5 வது பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை – அசல் – வா.சா.ஆ.11

12) 29.12.2016 – 1 வது பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்க 3 வது பிரதிவாதிக்கு பரிந்துரைத்து அதன் விவரத்தை வழக்கறிஞருக்கு தெரிவித்த ஆ 2/3824/2016, நாள்,10.1.2017 கடிதம் – அசல்– வா.சா.ஆ.12

13) 20.12.2016 – தாவா சொத்தை அளவை செய்ய 6 வது பிரதிவாதி, 5 வது பிரதிவாதிக்கு மனு செய்து அதன் அடிப்படையில் வெம்பக்கோட்டை சர்வே, வட்ட சார் ஆய்வாளர் 2 வது வாதிக்கு அனுப்பிய அறிவிப்பு – அசல் – வா.சா.ஆ.13,

14) 25.3.2017 – வாதிகள் மாவட்ட வருவாய் அலுவலருக்கு சர்வே எண்.14/2 உட்பிரிவை நீக்கரவு செய்ய கொடுத்த மனு – கைநகல் ரசீது – வா.சா.ஆ.14

15) – 1 வது வாதி 1 முதல் 7 பிரதிவாதிகள் மீது சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தாக்கல் செய்த Writ Petition No.12010/17 – அலுவலக நகல் – வா.சா.ஆ.15.

16) 18.7.2017 – மேற்படி ரிட் மனுவில் 5 வது பிரதிவாதி உயர்நீதிமன்றத்தில் அவரது வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்த ந.க.அ.2.1067/2017, நாள்,18.7.2017 – சார்பு செய்யப்பட்ட நகல் – வா.சா.ஆ.16.

17) 20.7.2017 – ரிட் மனுவில் உயர்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு – அசல் – வா.சா.ஆ.17.

18) 11.5.2017 – சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர், வெம்பக்கோட்டை வட்டாட்சியர் அவர்களுக்கு வாதிகளின் மனு மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள பிறப்பித்த குறிப்பாணை ஓ.மு.அ 3/1485/2017 – அசல் – வா.சா.ஆ.18.

19) நில உடமை திட்டத்தின் படி வாதிகள் சொத்துக்கு 2ம் வாதி இராமச்சந்திரன் ஆசாரி பெயரில் வழங்கப்பட்ட பட்டா – அசல் – வா.சா.ஆ.19

20) 26.12.2017 – 2ம் வாதி தாவா சொத்தில் சரளை மண் பரப்பாமல் தடுக்கும்படி மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய மனு – கைநகல் – வா.சா.ஆ.20

21)29.1.2018 1ம் பிரதிவாதி, 7ம் பிரதிவாதிக்கு 1 முதல் 5 பரிதிவாதிகள் கட்டடிடம் கட்டி கொடுத்த அனுமதியை ரத்து செய்யக் கோரி கொடுத்த மனு – கை நகல் – வா.சா.ஆ.21

22) – 1 முதல் 5 பிரதிவாதிகள் மனுவை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை (5 எண்ணிக்கை) – அசல் – வா.சா.ஆ.22

23) 22.8.2019 – 3ம் வாதி, 7ம் பிரதிவாதி மீது மாவட்ட ஆட்சியருக்கு தாவா சொத்தை சேதப்படுத்தியதாக கொடுத்த மனு – கைநகல் – வா.சா.ஆ.23

24) மனுவை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டை – அசல் – வா.சா.ஆ.24.

25) 29.1.2018 – 1ம் வாதி, மாவட்ட ஆட்சியருக்கு 7ம் பிரதிவாதிக்கு பட்டாசு தொழிற்சாலைக்கு கொடுத்த உரிமத்தை ரத்து செய்யக் கோரி கொடுத்த மனு மீது பாதை விதி மீறல் உள்ளதா என்று தனி வட்டாட்சியருக்கு விசாரணைக்கு பரிந்துரைத்த ந.க.இ 4/1299/2018 ன் படியான குறிப்பாணை – அசல் – வா.சா.ஆ.25.

26) 2.3.2018 – மாவட்ட ஆட்சியர் பரிந்துரையின் படி தீப்பெட்டி மற்றும் வெடிபொருள் தொழிற்சாலை ஆய்வாளர் (தனி வட்டாட்சியர்) மாவட்ட வருவாய் அலுவலருக்கு கொடுத்த அறிக்கை – அசல் – வா.சா.ஆ.26

27) 18.5.2018 – 3ம் வாதி மாவட்ட ஆட்சியருக்கு கொடுத்த மனு மீது வெம்பக்கோட்டை வட்டாட்சியருக்கு மாவட்ட ஆட்சியர் ஓ.மு.ஜீ2/13280/2018ன் படி பரிந்துரைத்த விசாரணை குறிப்பாணை – அசல் – வா.சா.ஆ.27.

28) 16.3.2019 – 3ம் வாதி வெம்பக்கோட்டை வட்டாட்சியருக்கு கொடுத்த மனு மீது விசாரணை செய்ய ஏழாயிரம்பண்ணை வருவாய் ஆய்வாளருக்கு பரிந்துரைத்த குறிப்பாணை – அசல் – வா.சா.ஆ.28.

29) 9.2.2022 – 3ம் வாதி யை வெம்பக்கோட்டை வட்டாட்சியர் ஜீப்பை ஏற்றி கொன்று விடுவதாக மிரட்டியதால் மாவட்ட ஆட்சியருக்கு 3ம் வாதி கொடுத்த மனு – கைநகல் – வா.சா.ஆ.29.

30) 18.2.2022 – மாவட்ட ஆட்சியர், சாத்தூர் கோட்டாட்சியருக்கு மனு மீது விசாரணை செய்ய பரிந்துரைத்த ஓ.மு.அ1/4379/2022 கடிதம் – அசல் – வா.சா.ஆ.30

31) 20.4.2022 – மாவட்ட வருவாய் அலுவலர் சாத்தூர் வருவாய் கோட்டாட்சியருக்கு பரிந்துரைத்த கடிதம் – அசல் – வா.சா.ஆ.31.

32) தாவா சொத்துக்கு 2ம் வாதி பெயரில் செலுத்திய தீர்வை ரசீதுகள் (3 எண்ணிக்கை) – அசல் – வா.சா.ஆ.32

33) 2.11.2022 – தாவா சொத்தில் வாதிகள் விவசாயம் செய்ய விடாமல் பாழ்படுத்துவதாக கொடுத்த புகார் மீது வட்டாட்சியர் விசாரணை செய்ய மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த குறிப்பாணை – வா.சா.ஆ.33.

34) – நீதிமன்ற ஆணையாளர் தாவா சொத்தை பார்வையிட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கை– அசல் – நீ.ம.சா.ஆ.1

35) நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடம் – அசல் – நீ.ம.சா.ஆ.2

36) பிர்க்கா சர்வேயர் கொடுத்த வரைபடம் – அசல் – நீ.ம.சா.ஆ.3.

பிராதில் கோரியபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வேண்டுகோளின் படி கு.வி ஒத்திவைக்கப்படுகிறது)